

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி தலைவர் எம்.எஸ்.அசோக் உட்பட 40க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்களுக்கு அடையாள அட்டையினை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.



விருதுநகர் தெற்கு மாவட்டம் , சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் , இ.குமாரலிங்கபுரம் ஊராட்சியில் மாவட்டத்தில் வெவ்வேறு வெடி விபத்துக்களில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கும், நீரில் மூழ்கி மரணமடைந்தவருக்கும் என மொத்தம் 18 நபர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.48.50 இலட்சம் நிவாரணத்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, சாத்தூர் ஒன்றிய தி.மு.க. செயலாளர் கடற்கரை ராஜ், நகரச் செயலாளர்கள் குருசாமி ஆகியோர் இருந்தனர்.

### ஜூலை 30 அன்று

# இளங்கலை மருத்துவம் - பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கலந்தாய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, ஜூலை 18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 16.07.2025 அன்று சைதாப்பேட்டை, 140வது வார்டு, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம் கட்டுமானப் பணி, ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் ரெட்டிக்குப்பம் சாலை மற்றும் கோடம்பாக்கம் சாலையில் 455 மீட்டர் மழைநீர் வடிகால்வாய் கட்டுமானப் பணி மற்றும் 142வது வார்டு, திடீர் நகரில் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஓரக்கல்வாய் கட்டும் பணியினை தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு கலந்தாய்வு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இளங்கலை மருத்துவம்/BDS பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கடந்த ஜூன் மாதம் 06 ஆம் தேதியிலிருந்து ஜீன் 29 ஆம் தேதி வரை பெறப்பட்டது. அதில் 72,743 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விண்ணப்பங்களில் ஒரு சில விண்ணப்பங்கள் சான்றிதழ்களை இணைக்க மறந்து விண்ணபத்திருப்பார்கள், அவர்களுக்கான கால அவகாசம் இரண்டு நாட்கள் வழங்கப்பட்டது. இந்த இரண்டு நாட்களில் எந்தெந்த மாணவர் எந்தெந்த சான்றிதழ்களை இணைக்கவில்லையோ அதனை இணைப்பதற்குரிய கால அவகாசமாக 2 நாட்கள் தரப்பட்டது. வழங்கப்பட்டிருக்கும் 2 நாட்களில் சான்றிதழ்களை இணைத்து மீண்டும் தந்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தகுதி பட்டியல் வெளியிடப்படும். தகுதி பட்டியல் சரி பார்க்கப்பட்டிருக்கும் போது 20 பேருடைய போலிச் சான்றிதழ்கள் இருப்பது கண்டறியப்பட்டது. 20 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்கள் போலியாக விண்ணப்பத்திருக்கிறார்கள். எனவே அந்த 20 மாணவர்களுக்கும் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்குரிய தகுதி நீக்கம் செய்யப்படவிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் 3 வருடங்களுக்கு கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டு மல்லாமல் இவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர இருக்கிறது. 20 மாணவர்களில் 7 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 9 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 4 மாணவர்கள் NRI தகுதிக்கான தூதரக சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். ஆக போலியான சான்றிதழ்களை வழங்கிய 20 மாணவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கையும், 3 ஆண்டுகள் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கும் தடை விதித்தும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. ஆக இந்த சான்றிதழ்களை சரிபார்ப்பதற்குரிய இறுதி நாளாக 18.07.2025 காலை 10 மணி வரை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

IRT மற்றும் முன்னாள் இராணுவத்தினர் பரிசீலினை தற்போது நடந்து வருகிறது. அவர்களுக்கும் 2 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட உள்ளது.

இந்த சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலினை முடிந்து, இறுதி பட்டியல் வருகின்ற 25.07.2025 காலை 10 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. இந்த பட்டியல் வெளியிடப்பட்டவுடன் ஒன்றிய அரசின் கால அட்டவணைப்படி 30.07.2025 அன்று முதல் கலந்தாய்வு நடத்தப்படவிருக்கிறது என்று அமைச்சர் மா.சுப்பிரமணி யன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### இருதயக் குறைபாட்டை சரி செய்து

# சாதனை படைத்த சேலம் மருத்துவர்களுக்குப் பாராட்டு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!



சேலம், ஜூலை 18-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதையொட்டி மருத்துவர்கள் மற்றும் குணமடைந்தவர்களை நேற்று முன்தினம் (16.07.2025) நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இதில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவ கட்டமைப்பினை தொடர்ச்சியாக மேம்படுத்திடும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். வளர்ந்து வரும் நவீன காலத்திற்கேற்ப மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

அந்த வகையில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் இருதயவியல் துறை சார்பில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் (DEVICE CLOSURE) மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இசைமதி (5 வயது) மற்றும் சபரிநாதன் (16 வயது) ஆகிய இருவரும் வென்ட்ரிகுலர் செப்டல் (VSD) குறைபாட்டினாலும், கௌதம் (15 வயது) மற்றும் சந்தியா (15 வயது) ஆகிய இருவரும் பேடன்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் (PDA), வள்ளி (27வயது) மற்றும் சுகுணா (32 வயது) ஆகிய இருவரும் ஏட்ரியல் செப்டெல் (ASD) குறைபாடு எனப்படும் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

அவர்களது இருதய நோயானது எக்கோகார்டியோகிராபி மூலம் கண்டறியப்பட்டு அவர்களது இருதய குறைபாட்டின் அளவிற்கேற்ப தலையீட்டு சாதனம் கொண்டு கடந்த 12.07.2025 சனிக்கிழமை அன்று முழுமையாக சரிசெய்யப்பட்டது. இதன் மூலம் அவர்களுக்கு பிற்காலத்தில் இருதய செயலிழப்பு மற்றும் மாறுபட்ட இருதய துடிப்பு வராமல் தடுக்க முடியும் மற்றும் இயல்பான வாழ்க்கை வாழலாம்.

இந்த வகையான இருதய சிகிச்சை அளிப்பது இது இரண்டாவது முறையாகும். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நான்கு குழந்தைகளுக்கு இதுபோன்ற இருதய சிகிச்சை அளிக்கபட்டது. இந்த முறை மூன்று குழந்தைகள் RBSK மற்றும் DEIC குழு மூலமாகவும், மூன்று பெண்கள் இருதய துறை புற நோயாளிகள் பிரிவு மூலமாகவும் கண்டறியப்பட்டு, இந்த உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இந்த உயர்தர சிகிச்சையானது சிறப்பு மருத்துவர் குழுவினர், மயக்கவியல் துறை, இருதய அறுவை சிகிச்சை துறை, இருப்பு மருத்துவர் மற்றும் இருதய மருத்துவத்துறை மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழு மூலம் வெற்றிகரமாக இருதய சிகிச்சை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரை செலவாகும் இந்த சிகிச்சை, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிறப்புமிக்க சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட மருத்துவர்களுக்கும், குணமடைந்தவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.தேவி மீனா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில்

# பெரம்பலூர் மாவட்டத்தில் 3 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து – பேருந்தில் பயணித்தார்!

பெரம்பலூர், ஜூலை 18 -

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அரியலூர் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வயலப்பாடியிலிருந்தும், குன்னம் முதல் சென்னை வரை புதிய வழித்தடத்திலான பேருந்து சேவையினை வேப்பூரிலிருந்தும், விடியல் பயணம் திட்டத்தின் கீழ் லெப்பைக்குடிகாடு முதல் பெரம்பலூர் வரை மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவையினை லெப்பைக்குடிக்காடு சந்தைத் திடல் பகுதியிலிருந்தும் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களைப் பார்த்து அண்டை மாநிலங்களும், வெளிநாடுகளும் செயல்படுத்தி வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச்செய்யும் உயர்ந்த நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான விடியல் பேருந்து பயண திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். ஏழை எளிய மக்களின் போக்குவரத்து செலவினை குறைக்கும் வகையில் நமது மாநிலத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், அரியலூர் முதல் வேப்பூர், வயலப்பாடி, லெப்பைக்குடிக்காடு வழியாக சென்னை மாதவரம் வரை செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, குன்னம் முதல் நமங்குணம், வயலப்பாடி, வேள்விமங்கலம், அங்கனூர், அகரம் சீகூர் வழியாக சென்னை மாதவரம் செல்லும் வகையில் புதிய வழித்தடத்திலான பேருந்து சேவை, விடியல் பயணம் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் முதல் வாலிகண்டபுரம் சின்னாறு தொழுதூர் வழியாக லப்பைக்குடிக்காடு வரை செல்லும் மகளிர்களுக்கான இலவச பேருந்து பயண சேவை என மூன்று வழித்தடங்களுக்கும் புதிய பேருந்து சேவை இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கும்பகோணம் துணை மேலாளர் (தொழில்நுட்பம்) புகழேந்தி ராஜ், கோட்ட மேலாளர் ராம்குமார்,

ஒன்றிய கழக செயலாளர்கள் தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு.நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர் உசேன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் எ.ரசூல்அகமது மற்றும் கிளை மேலாளர்கள், போக்குவரத்துத்துறை பணியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வில்லியனூர் சிவ கணபதி நகரில்

# ரூ.10 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணி!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, ஜூலை 18-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி சிவகணபதி நகருக்கு உட்பட்ட ராகவேந்திரா நகரில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ.9 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் வேதாசலம், சதாசிவம், சம்பங்கி, சசிகுமார், ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தி, இளங்,கோ, குமார், ராவ், ராஜேந்திரன், விஸ்வநாதன், காசிநாதன், சக்திவேல்,

முருகையன், சங்கர், வெங்கட், அந்துவான், புஷ்பராஜ் மற்றும் தி.மு.க. சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சரவணன், விவசாய அணி துணை அமைப்பாளர் கோபி, ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணைச் செயலாளர் ஹரிகிருஷ்ணன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கிளைக் கழக நிர்வாகிகள் சபரிநாதன், ராஜி, மிலிட்டரி முருகன், சேகர், கலைமணி, சரவணன், முருகேசன், பாலமுருகன், ராஜேந்திரன், பாலு, பாலகுரு, கமால் பாஷா, ராமஜெயம், சந்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி சிவகணபதி நகருக்கு உட்பட்ட ராகவேந்திரா நகரில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ. 9 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடந்தது. இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வானூர் சட்டமன்ற தொகுதி, வானூர் மத்திய ஒன்றியம், வானூர், நைனார் பாளையம் ஆகிய பகுதியில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கை பரப்புரைக்கான களப்பணியை பூத் எண்: 138, 139, 140, 141, 142, 143 ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, வாக்குச்சாவடி முகவர்களுடன் கலந்துரையாடினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர் மைதிலி ராஜேந்திரன், மு.சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் வி.எம்.ஆர்.சிவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அன்பரசு, மாவட்ட துணை அமைப்பாளர் புஷ்பராஜ், ஒன்றிய நிர்வாகிகள் சங்கர், ராஜவேல், நெடுஞ்செழியன், சிவதாசன், வெங்கடேசன், வீரமணிகண்டன், ஒன்றிய கவுன்சிலர் சசிகுமார், பி.எல்.ஏ.2 & பி.டி.ஏ., கிளை நிர்வாகிகள் பசுபதி, சுப்ரமணியன், சதாசிவம், வினோத்குமார், பெருமாள், கார்த்திகேயன், சுந்தர மூர்த்தி, பசுபதி, ராஜவேல், சுதா, ராஜேந்திரன், சுமதி, பூபாலன், ஏழுமலை, லட்சுமி காந்தன், மூவேந்தன், மனோன்மணி, செங்குட்டுவன், பிரகாஷ், தினேஷ், அம்பிகா, அழகுவேல், வீரராகவன், சுந்தரபாண்டியன், வேலு, ஜெயகோபாலன், சுகந்தி, செங்குட்டுவன், பாபு, சந்தானம், கண்ணகி, ஆனந்தபாபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.